தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில்
YAMAHA SHOWROOM
தமிழர் தைத்திருநாளை முன்னிட்டு குறிப்பிட்ட மாடல்களுக்கு மட்டும்
₹ 10,000 SPECIAL OFFER

ஸ்ரீ கோமதி ஆட்டோ ஏஜென்சீஸ்
197-B,மெயின் ரோடு, சங்கரன்கோவில்
99442 14004

சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
PRGI NO: TNTAM/25/A1018

SN ஆட்டோ கன்சல்டிங்
டூவீலர் விற்க வாங்க...
பைனான்ஸ் வசதி உண்டு
317, ராஜபாளையம் ரோடு, SBI வடபுறம், சங்கரன்கோவில்
G.சுதாகர் - 99656 02104

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 230 12.2.2026 THURSDAY THAI : 29 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 230 12.2.2026 வியாழக்கிழமை தை : 29 விலை : ரூ.5/-

## "ஊழல் கறை படிந்தவர்களை ஒன்று சேர்த்து தேர்தலை சந்திக்கிறது என்டிஏ"

# "முதல்வர் கடும் தாக்கு!"

சென்னை: பிப்.12-

"மத்திய பாஜக அரசு தமிழகத்துக்கு பட்ஜெட்டில் தந்தது 'ஜீரோ'தான். இப்போது, என்டிஏ கூட்டணிக்கு அதே ஜீரோவை மக்களும் திருப்பித் தர போகிறார்கள். தேசிய ஜனநாயகக் கூட்டணியில் ஊழல் கறை படிந்த அத்தனை பேரையும் ஒன்று சேர்த்துக்கொண்டு, பொய்களை பரப்பிகொண்டு, தேர்தலை சந்திக்க வருகிறார்கள்" என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 'இந்தியா டுடே' சார்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையில், "தமிழ்நாட்டு மக்களின் மனதில் என்ன இருக்கிறது என்று இந்தியா டுடேவும் சிவோட்டர்ஸ் நிறுவனமும் நடத்திய சர்வேயில் திமுக கூட்டணி 45 சதவீதம் ஆதரவோடு லீடிங்கில் இருக்கிறது.

எங்களுக்கும், இரண்டாம் இடத்துக்கும் இருக்கக் கூடிய வித்தியாசத்தைப் பார்த்தீர்கள் என்றால், 12 சதவீதம். இங்கே பத்திரிகையாளர்கள், அரசியல் ஆர்வலர்கள் என்று பலரும் இருக்கிறீர்கள். உங்களுக்கே தெரியும், மூன்று சதவீதம் வித்தியாசம் இருந்தாலே கிளீன் ஸ்வீப்தான். 12 சதவீதம் என்றால், அது நிச்சயம் மிகப் பெரிய வெற்றிதான். அதில் எந்த மாற்றமும் இருக்காது. அதற்கென்று, நாங்கள் மெத்தனமாக இருக்க மாட்டோம்.

உங்களைப் பொறுத்தவரைக்கும், இந்த சர்வே ரிசல்ட், எங்களுக்கான பூஸ்ட். அவ்வளவுதான். ஏனென்றால், தி.மு.க. என்பது, எப்போதும், என்றென்றும், மக்களுடன் இருக்கக்கூடிய இயக்கம். மக்களுக்காக பாடுபடக்கூடிய இயக்கம். அதனால், இன்னும் உற்சாகமாக உழைத்து, உங்களுடைய கணிப்பை உண்மையாக்குவோம்.

கடந்த ஐந்த ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு என்ன நிலைமையில் இருந்தது என்று இங்கே இருக்கின்ற எல்லோருக்கும் தெரியும். அதேசமயம், இப்போது திராவிட மாடல் அரசு அமைந்து இந்த ஐந்து ஆண்டுகளில் வரலாறு காணாத வெற்றிப் பாதையில் தமிழ்நாடு வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கிறது! வரும் தேர்தலில் வென்று, இந்த வளர்ச்சிப் பயணத்தை வெற்றிப் பயணத்தை திராவிட மாடல் 2.0விலும் தொடர்வோம்.



ஊடக நண்பர்கள் மற்றும் அரசியல் பார்வையாளர்களான உங்கள் முன்பு சில புள்ளிவிவரங்களை நான் முன்வைக்கிறேன். தமிழ்நாட்டின் கடந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி 11.19 சதவீதம். இந்த இரட்டை இலக்க வளர்ச்சியை, கடைசியாக எப்போது எட்டினோம் தெரியுமா? 14 ஆண்டுகளுக்கு முன்பு, அதுவும் தி.மு.க. ஆட்சி யில்தான். தமிழ்நாட்டுக்கு எதிராக செயல்படுவதிலும், தி.மு.க. அரசுக்கு குடைச்சல் கொடுப்பதிலும் கவனமாக இருக்கும் ஒன்றிய அரசாலேயே, இந்த வளர்ச்சியை மறைக்க முடியவில்லை; மறுக்க முடியவில்லை.

தமிழ்நாட்டின் ஜிஎஸ்டிபி எவ்வளவு? 17 லட்சத்து 23 ஆயிரத்து 698 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. தனிநபர் வருமானம் 3 லட்சத்து 58 ஆயிரம் ரூபாய். தேசிய சராசரியுடன் கூட ஒப்பீடு செய்தால், இது, 1.74 மடங்கு அதிகம். அடுத்து, இந்தியா முழுவதும் 50 சதவீதம் அரசு மேல்நிலைப் பள்ளிகளில்தான் அறிவியல் ஆய்வகம் இருக்கிறது. இதுவே தமிழ்நாட்டில் 98.3 சதவீதம் பள்ளிகளில் ஆய்வகம் இருக்கிறது. N.I.R.F. தரவரிசையில், தலைசிறந்த நூறு கல்லூரிகளில், தமிழ்நாட்டைச் சேர்ந்த கல்லூரிகளின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 33. நாட்டின் முதல் 50 பல்கலைக்கழகங்களில் 10 தமிழ்நாட்டில்தான் இருக்கிறது!

நிதி ஆயோக் வெளியிட்ட S.D.G குறியீட்டில், 78 புள்ளிகளோடு, தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது. இப்படி, எந்த புள்ளிவிவரங்களை எடுத்துக்கொண்டாலும், தமிழ்நாடு மேலே இருக்கிறது! அதனால்தான், 65க்கு மேற்பட்ட ஒன்றிய அரசு விருதுகள் தமிழ்நாட்டை தேடி வருகிறது.

இப்படி ஏராளமான புள்ளிவிவரங்களை என்னால் பட்டியலிட முடியும். இதையெல்லாம் சாதாரணமாக நாங்கள் சாதித்துவிடவில்லை. ஏராளமான மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி, எதிர்காலத்திற்கான முதலீடுகளை செய்து, சாதித்திருக்கிறோம்.

திராவிட மாடல் செயல்படுத்தும் திட்டங்களைப் பார்த்து, பல்வேறு மாநிலங்களில், அந்த திட்டங்களை கொண்டு வருகிறார்கள். இப்போதுகூட, எங்களின் தோழி விடுதியை மாடலாக எடுத்துகொண்டு. ஒன்றிய அரசு பட்ஜெட்டில் ஒரு திட்டம் அறிவித்திருக்கிறார்கள். எல்லோருக்கும் தரமான மருத்துவத்தை கொண்டு சேர்க்க வேண்டும் என்று நாங்கள் உருவாக்கிய மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தை ஐ.நா. அமைப்பே விருது கொடுத்து பாராட்டியிருக்கிறது! நாங்கள் செய்வது எல்லாமே முன்னோடித் திட்டங்களாக மாறியிருக்கிறது.

தி.மு.க. அரசு தொடர்ந்தால் தான், தமிழ்நாட்டின் எதிர்காலம் நன்றாக இருக்கும் என்று மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கைக்கு என்றைக்கும் உண்மையாக இருக்க வேண்டும் என்றுதான் நாங்கள் உழைத்துக் கொண்டிருக்கிறோம். அதேசமயம், இவ்வளவு நன்மைகள் செய்யக்கூடிய தி.மு.க. அரசுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு எப்படியெல்லாம் நெருக்கடிகளை கொடுக்கிறது என்பதையும் மக்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

நிதிப்பகிர்வு, வரிப்பகிர்வு, சிறப்புத் திட்டங்கள், ரயில்வே திட்டங்கள் என்று எல்லாவற்றிலும் தமிழ்நாட்டிற்கு அநீதியையும் துரோகத்தையும்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். ஏன், இப்போது வெளியிட்ட பட்ஜெட்டில்கூட அவர்கள் தமிழ்நாட்டிற்கு செய்தது என்ன? தமிழ்நாட்டிற்கு நன்மை செய்வார்கள் என்று நம்பிதான் கோரிக்கைகள் வைக்கிறோம். ஆனால், பட்ஜெட்டில் தந்தது 'ஜீரோ'தான்! இப்போது, என்டிஏ கூட்டணிக்கு அதே ஜீரோவை மக்களும் திருப்பித் தர போகிறார்கள். மக்கள் எல்லாவற்றையும் பார்த்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

நிர்வாக ரீதியாக இந்த அளவுக்கு இடைஞ்சல்கள் கொடுப்பது, ஆளுநரை வைத்தும், அவதூறுகள் பரப்பியும், அரசியல் ரீதியாக சீண்டிப் பார்க்கிறார்கள். ஊழல் கறை படிந்த அத்தனைபேரையும் ஒன்று சேர்த்துக்கொண்டு, பொய்களை பரப்பிகொண்டு, தேர்தலை சந்திக்க வருகிறார்கள். இந்த ஊழல் கூட்டணிக்கு பெயர் டபுள் எஞ்சின். அந்த டப்பா எஞ்சினுடைய லட்சணத்தை டெல்லி, உத்தரப் பிரதேசம், பிஹார் என்று பல மாநிலங்களில் பார்த்துகொண்டு தான் இருக்கிறோமே?

பா.ஜ.க.வைப் பொறுத்தவரைக்கும், வெறுப்பைப் பரப்பி, பிரச்சினைகளை உருவாக்கி, அதில் குளிர்காய வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஒரே ஒரு உதாரணத்தை சொல்கிறேன். தமிழ்நாட்டைப் போலவே, அசாமிலும் இப்போது தேர்தல் வரப்போகிறது. அதற்கு, அசாம் பி.ஜே.பி.யின் சோசியல் மீடியா பக்கங்களில் வீடியோக்களை வெளியிட்டு வருகிறார்கள். நீங்கள் எல்லோரும் பார்த்திருப்பீர்கள். அதில், அந்த மாநிலத்தைச் சார்ந்த ஆளும் பா.ஜ.க. முதல்வர் துப்பாக்கியில் குறி வைப்பது போல போட்டிருந்தார்கள். அதுவும் யாருக்கு எதிராக? இப்படிப்பட்ட காட்சியை வைப்பதற்கான துணிச்சல் அவர்களுக்கு எங்கிருந்து வந்தது.

ஜனநாயக இந்தியாவில், இப்படியெல்லாம் நடக்கும் என்று யாராவது நினைத்துப் பார்த்திருப்போமா. இந்த நிலைமையைதான் இந்தியா முழுவதும் ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அதற்கு அவர்களுக்கு துணையாக இருப்பது இரண்டு விஷயம். ஒன்று, அடிமைகள் ஞீ மற்றொன்று, அவதூறுகள்.

இதையெல்லாம் பயன்படுத்தி ஜனநாயகத்தின் அத்தனை விழுமியங்களையும் ஒழித்திடவேண்டும் என்று நினைக்கிறார்கள். அதற்கு நாட்டிலுள்ள ஜனநாயக சக்திகள் நிச்சயம் இடம் கொடுக்கக் கூடாது. தமிழ்நாட்டிற்கு சேரவேண்டிய நிதியையும், நீதியையும் நிச்சயமாக நாங்கள் பெற்றுத் தருவோம். பாஜகவின் பாசிச அரசியல் தமிழ்நாட்டில் நிச்சயம், நிச்சயம், நிச்சயமாக அது எடுபடாது! நிறைவேறாது. திராவிட மாடல் 2.ளிவில் தமிழ்நாட்டை காத்து இந்தியாவின் நம்பர்1 மாநிலமாக தொடர்ந்து வளர்த்தெடுப்பது நிச்சயம்" என்றார் முதல்வர் ஸ்டாலின்.



## சிபிஎஸ்இ பள்ளிகளில் 'கட்டாய கல்வி உரிமைச் சட்டம்' நடைமுறைக்கு வருமா?

கோவை: பிப்.12-

கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தை தனியார் சிபிஎஸ்இ மற்றும் ஐசிஎஸ்இ பள்ளிகளில் நடைமுறைப்படுத்த வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது. மக்களவையில் கடந்த 2009ம் ஆண்டு கல்வி உரிமைச் சட்டம் சட்டமாக இயற்றப்பட்டு, 2010ம் ஆண்டு ஏப்ரல் 1ம் தேதி முதல் நாட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டது. உலகில் பல நாடுகள், நூறாண்டுகளுக்கு முன்பே கல்வியை அடிப்படை உரிமை என்று சட்டம் இயற்றிவிட்டன.

ஆனால் விடுதலை பெற்று 60 ஆண்டுகளுக்கு பிறகு தான், இந்தியாவில் இயற்றப்பட்டது. கல்வியை அடிப்படை உரிமை என்று அறிவித்த 135வது நாடு இந்தியா. வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மக்களின் குழந்தைகள் அனைவருக்கும் 6 வயது முதல் 14 வயது வரை இலவச கல்வி கிடைக்க வேண்டும் என்பது இதன் அடிப்படை.

தனியார் பள்ளிகளில் 25 சதவீதம் இலவச கல்வி வழங்க வேண்டும் என்ற இந்த சட்டத்தை யாரும் கண்காணிப்பதில்லை என்ற குற்றச்சாட்டுகள் தொடர்ந்து எழுகின்றன. அதேபோல மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு தாமதம் உள்ளிட்ட காரணங்களால் இச்சட்டம் நீர்த்து வருவதாகவும் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன.

தமிழகத்தில் 60 சதவீதம் பேர் அரசு பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிப்பவர்கள்தான். தமிழ்நாட்டில் உள்ள சிபிஎஸ்இ மற்றும் ஐசிஎஸ்இ பள்ளிகளில் கட்டாய கல்வி உரிமைச் சட்டப்படி ஏழை மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும் என சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார் கோவையை சேர்ந்த மறுமலர்ச்சி மக்கள் இயக்கத்தின் தலைவர் வே.ஈஸ்வரன்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது: மத்திய அரசின் கேந்திரிய வித்யாலயா சிபிஎஸ்இ பள்ளிகளில் கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் 25 சதவீதம் ஏழை மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். ஆனால் தனியார் சிபிஎஸ்இ பள்ளிகளில், கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் ஏழை மாணவர்கள் சேர்க்கப்படுவ தில்லை.

தனியார் சிபிஎஸ்இ பள்ளிகளில் கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தை அமல்படுத்துவது, மாநில அரசின் பொறுப்பு என்று சிபிஎஸ்இ வாரியம் தெரிவிக்கிறது. வரும் கல்வியாண்டில் சிபிஎஸ்இ பள்ளிகளில் கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் மாணவர்கள் சேர்க்கப்படுவதை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும்.

கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் மாநகர் பகுதிகளில் பள்ளியில் இருந்து 5 கி.மீ. வரையும், புறநகர் பகுதியில் பள்ளியில் இருந்து 8 கி.மீ வரையும் வசிப்பிடம் இருந்தா லும், மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ஆனால் தமிழ்நாடு அரசு வசிப்பிடத்தின் தொலைவை ஒரு கி.மீ. என்று நிர்ணயித்துள்ளது. இதனால் குழந்தைகள் பாதிக்கப்படு கிறார்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கல்வி மேம்பாட்டு கூட்டமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் சு.மூர்த்தி கூறும்போது, "அனைத்து தனியார் சுயநிதிப் பள்ளிகளிலும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் விதியின் அடிப்படையில் பள்ளிக்கு அருகில் வசிக்கும் நலிவுற்ற மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவை சேர்ந்த குழந்தைகளுக்கு குறைந்தபட்சம் 25 சதவீதம் முதல் வகுப்பில் சேர்க்கை வழங்க வேண்டும்.

சமூக மற்றும் பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய மற்றும் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த குழந்தைகளுக்கு, வசதி படைத்த குழந்தைகள் பயிலும் தனியார் பள்ளிகளில் பயில வாய்ப்பு அளிப்பதே இந்த சட்ட விதியின் முதன்மை நோக்கம்.

பலவகையான சமூக மற்றும் பொருளாதார பின்னணி கொண்ட குழந்தைகள் ஒரே வகுப்பறையில் இணைந்து பயில்வதன் மூலம், கல்வியில் பாகுபாடற்ற நிலையை உருவாக்க முடியும். ஒற்றுமையுள்ள சமூகத்தை உருவாக்க முடியும்" என்றார்.

கோவை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலமுரளி கூறியதாவது: அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் மெட்ரிக் பள்ளிகள், கட்டாய கல்வி உரிமைச்சட்டத்தின் பட்டியலில் வருகின்றன. ஆனால் சிபிஎஸ்இ பள்ளிகள் தொடர்பாக எந்தவொரு அறிவிப்பும் எங்களுக்கு இல்லை. கட்டாய கல்வி உரிமைச்சட்டம் என்பது அனைத்து பள்ளிகளுக்குமானது என்றாலும், சிபிஎஸ்இ மற்றும் ஐசிஎஸ்இ பள்ளிகள் தொடர்பான விவரங்கள் எங்களிடம் இல்லை, என்றார்.

கல்வி உரிமைச்சட்ட கண்காணிப்பு அதிகாரிகள் கூறும்போது, "இணையத்தில் நர்சரி, பிரைமரி மற்றும் மெட்ரிக் பள்ளிகள் தான் விண்ணப்பிக்க இயலும். ஆனால் சிபிஎஸ்இ மற்றும் ஐசிஎஸ்இ பள்ளிகள் தொடர்பாக தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித்துறை தான் முடிவு செய்ய வேண்டும்" என்றனர்.

## திண்டுக்கல்லில் அதிரடி அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் மாற்று கட்சியினர் திமுகவில் இணைவு!

சின்னாளபட்டி, பிப்.12-

திண்டுக்கல் மாவட்டம் தாடிக்கொம்பு வட்டார காங்கிரஸ் தலைவராக இருப்பவர் கே. தனபாலன் இவர் .தாடிக்கொம்பு பேரூராட்சி 11வது வார்டு உறுப்பினராக உள்ளார் முன்னாள் இளைஞர் காங்கிரஸில் தொகுதி பொறுப்பாளராகவும் செயல்பட்டு வந்துள்ளார் ஆத்தூர் தொகுதியில் அமைச்சர் ஐ.பெரியசாமி அனைத்து சமுதாய மக்களுக்கும் நலத்திட்டங்களை பாகுபாடு இன்றி செய்வதை தொடர்ந்து 20 வருடங்களுக்கு மேலாக காங்கிரஸ் கட்சியில் இருக்கும்போது பார்த்து வந்த தனபாலன் அமைச்சர் ஐ பெரியசாமி அவர்களின் கரத்தை பலப்படுத்தும் வகையில் தாடிக்கொம்பு, 11வது வார்டு அருணாச்சலம் நகர் மற்றும் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த காங்கிரஸ் பாஜக தொண்டர்கள் 50 பேருடன் அமைச்சர் ஐ பெரியசாமி இல்லத்திற்கு நேரில் வந்து, அமைச்சருக்கு பூங்கொத்து கொடுத்து சால்வை அணிவித்து தன்னை திமுகவில் இணைத்து கொண்டார்.

தனபாலன் மற்றும் அவருடன் வந்த 50 பேருக்கும் கட்சியின் சின்னம் குறித்த ஆடை அணிவித்து வாழ்த்து தெரிவித்து பேசிய அமைச்சர் ஐ பெரியசாமி அவர்கள் சிறப்புமிகு திட்டங்களால் மாற்று கட்சிகளும் திமுகவில் இணையும் சூழ்நிலை தமிழகத்தில் உருவாகியுள்ளது. கூட்டணி கட்சியான காங்கிரஸிலிருந்து நம்முடன் இணைந்து பணியாற்றிய தனபாலன் இன்று நமது கழகத்தில் இணைந்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது என்றார்.

# பழங்குடியினர் சமூக பெயர் மாற்றம் கோரிய மனு தள்ளுபடி



மதுரை, பிப்.12.-

தூத்துக்குடியைச் சேர்ந்த செல்வகுமார் என்பவர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் 2019ல் பிறப்பிக்கப்பட்ட அரசாணையில் சீர் மரபினருக்கான சாதிச் சான்றிதழ் டினன்டி என்ற ஒரே பெயரில் வழங்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டது.

ஆனால், நடைமுறையில் டினன்டி/டினன்சி என இருவகைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இதனால் பழங்குடியினர் பிரிவில் வருபவர்கள் மத்திய அரசின் நலத் திட்டங்களைப் பெற முடியாத நிலை உள்ளது.

குற்றப் பரம்பரைச் சட்டம் ரத்து செய்யப்பட்ட பின்னரும், அவர்களை அறிவிப்பு நீக்கப்பட்ட பழங்குடிகள் (டி நோட்டிபைடு டிரைப்ஸ்) என்று அழைப்பது சட்டவிரோத மாகும்.

அவர்களை மரியாதைமிக்க பூர்வீக பழங்குடிகள் (டிக்னிலைடு நேட்டிவ் டிரைப்ஸ்) என்று அழைக்க வேண்டும். எனவே சாதிச் சான்றிதழ் வழங்கும்போது, அறிவிப்பு நீக்கப்பட்ட பழங்குடிகள் என்பதை, மரியாதைமிக்க பூர்வீக பழங்குடிகள் என்று வழங்கவும், அவர்களுக்கு தேசிய அளவில் தனி இட ஒதுக்கீடு வழங்கவும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

அரசிடம் முறையிடலாம்... இந்த மனுவை நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே. ராமகிருஷ்ணன் அமர்வு விசாரித்து, "இது அரசின் கொள்கை முடிவோடு தொடர்புடையது என்பதால், நீதிமன்றம் எந்த உத்தரவையும் பிறப்பிக்க இயலாது. மனுதாரர் அரசிடம் முறையிட்டு நிவாரணம் பெறலாம். மனு தள்ளுபடி செய்யப்படுகிறது" என்று உத்தரவிட்டது.




■ பழனியை தனி மாவட்டமாக அறிவிக்க கோரி பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக, பழனியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை எழுச்சி உரையாற்றினார். பாரதிய ஜனதா கட்சியின் தற்போதைய பழனி சட்டமன்ற தொகுதி அமைப்பாளர் கனகராஜ் சிறப்புறையாற்றினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் கூட்டணி கட்சிகளான இந்திய தேசிய பார்வர்டு பிளாக், இந்திய ஜனநாயக கட்சி, அம்மா மக்கள் முன்னேற்ற கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் ஆகிய கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகளும், தொண்டர்களும் கலந்து கொண்டனர். சுமார் பனிரெண்டாயிரத்திற்கும் அதிகமான பொதுமக்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம் மாநகராட்சி வண்டியூர் பூங்காவில், ரூ.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகளை, மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் பார்வையிட்டார். கண்மாயில் படகு சவாரி, சைக்கிளிங் பாதை அமைத்தல், நடைபயிற்சி பாதை, யோகா மையம், தியான மையம், சிறிய நூலகம், சிற்றுண்டி, குழந்தைகள் மற்றும் முதியோர் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய விளையாட்டு உபகரணங்கள், செயற்கை நீரூற்று, ஸ்கேட்டிங் தளம், பூங்கா ஆகியவை அமைகிறது.

# "நாம் ஒரு போர் சகாப்தம் நோக்கி நகர்கிறோம்..." மக்களவையில் ராகுல் காந்தி பேச்சு



புதுடெல்லி, பிப்.12.-

"உண்மையில் நாம் போர் சகாப்தத்துக்குள் நகர்கிறோம்" என மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்தார்.

மக்களவையில் இன்று பேசிய ராகுல் காந்தி, "அரசின் சமீபத்திய பொருளாதார ஆய்வறிக்கையை ஆய்வு செய்தபோது, இரண்டு குறிப்பிடத்தக்க விஷயங்களைக் கண்டறிந்தேன். முதல் புள்ளி... நாம் தீவிரமடைந்து வரும் புவிசார் அரசியல் மோதலின் உலகில் வாழ்கிறோம். அமெரிக்காவின் ஆதிக்கம் இப்போது சீனா, ரஷ்யா மற்றும் பிற சக்திகளால் சவாலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இது ஒரு துருவ உலகளாவிய ஒழுங்கிலிருந்து விலகிச் செல்வதைக் குறிக்கிறது.

இரண்டாவது விஷயம் என்னவென்றால், நாம் எரிசக்தி மற்றும் நிதி ஆயுதமயமாக்கலின் உலகில் வாழ்கிறோம். இவை இரண்டும் உலகளாவிய அதிகாரப் போராட்டங்களில் சர்வதேச அரசியல் வியூக கருவிகளாக அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. அவர்கள் இங்கே சொல்லும் முக்கிய விஷயம் என்னவென்றால், நாம் ஸ்திரத்தன்மையின் உலகத்திலிருந்து, ஸ்திரமின்மையின் உலகத்துக்கு நகர்கிறோம்.

பிரதமரும் தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் போர் சகாப்தம் முடிந்துவிட்டது என்று சிறிது காலத்திற்கு முன்பு கூறினர். ஆனால், உண்மையில் நாம் போர் சகாப்தத்துக்குள் நகர்கிறோம்.

உக்ரைனில் போர் இருப்பதை நீங்கள் காணலாம், காசாவில் போர் இருந்தது, மத்திய கிழக்கில் போர் இருந்தது, ஈரானில் போர் அச்சுறுத்தல் உள்ளது. நாமும் சிந்தூரில் நடவடிக்கைகளை மேற்கொண்டோம். எனவே நாம் உறுதியற்ற உலகத்துக்கு நகர்கிறோம்.

அமெரிக்க டாலருக்கு சவால் விடுக்கப்படுகிறது. அமெரிக்க மேலாதிக்கத்துக்கும் சவால் நிலவுகிறது. ஒரு வல்லரசின் உலகத்திலிருந்து நாம் உண்மையில் கணிக்க முடியாத புதிய உலகத்துக்கு நகர்கிறோம்" என்று ராகுல் காந்தி கூறினார்.

# பிப்.22 முதல் கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீட்டு பேச்சுவார்த்தை: திமுக அறிவிப்பு




சென்னை, பிப்.12.-

வரும் 22ம் தேதி முதல் கூட்டணி கட்சிகளுடன் தொகுதிப் பங்கீட்டு பேச்சுவார்த்தை தொடங்கும் என திராவிட முன்னேற்ற கழகம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக திமுக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

நடைபெறவுள்ள 2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்கான களப்பணிகளில் கழக உடன்பிறப்புகள் சுற்றிச் சுழன்று பணியாற்றி வருகின்றனர். வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்புத் திருத்த நடவடிக்கை நிறைவடைந்திருக்கிறது. இதற்காக, மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், பகுதி நகர ஒன்றியக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், சார்பு அணியினர், வாக்குச்சாவடி முகவர்கள் குழுவினர் என லட்சக்கணக்கானோர், கடந்த சில வாரங்களாகத் தீவிர பணியாற்றி வந்துள்ளனர்.

'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை, 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி', மேற்கு மற்றும் வடக்கு மண்டல இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பு மாநாடு, டெல்டா மற்றும் தெற்கு மண்டல மகளிரணி மாநாடு என வெற்றிக்கனி பறிப்பதற்கான அடிப்படைப் பணிகளை அர்ப்பணிப்போடு செயல்பட்டு வருகிறார்கள்.

இனி வரும் நாட்களில் வீடு வீடாக, வெல்லும் தமிழ் பெண்கள் பரப்புரையை, மகளிர் படை மேற்கொள்ளவிருக்கிறது. மேலும், வாக்குச்சாவடி குழுவினருக்கு நான்கு பயிற்சி மாநாடுகள், திருச்சியில் 'ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்' மாநாடு என இடைவிடாத களப் பணிகள் ஒரு புறமும், திராவிட மாடல் அரசின் மூலம் அடுக்கடுக்கான நலத்திட்டங்களின் அமலாக்கம் மறுபுறமும் ஒவ்வொரு நாளும் நடந்து வருகின்றன.

தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்கான குழு அமைக்கப்பட்டு, அக்குழுவினர் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து மக்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் அறிந்து வருகின்றனர். இதுவரையிலும் 75,000 கோரிக்கைகளும் பரிந்துரைகளும் பெறப்பட்டுள்ளன.

வரும் 17ம் தேதி தமிழ்நாடு அரசின் இடைக்கால நிதி நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, தொடர்ந்து அதன் மீதான விவாதம் நடைபெற இருக்கிறது. கழகத் தலைவர் ஸ்டாலின், அமைக்கவுள்ள திமுக தொகுதி பங்கீட்டுக் குழுவானது, சட்டப்பேரவை அலுவல்கள் நிறைவடைந்தவுடன், பிப்ரவரி 22ம் தேதி முதல் தோழமை கட்சிகளுடன் தொகுதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் என தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# திசையன்விளை பல்கலைக்கழக கல்லூரியில் விலையில்லா மடிக்கணினி வழங்குதல்

திசையன்விளை, பிப்.12.-

திசையன்விளை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரியில், மூன்றாம் ஆண்டு இளங்கலை பயிலும், அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் தமிழ்நாடு அரசு வழங்கும் விலையில்லா மடிக்கணினி வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் தொடக்கமாக குத்து விளக்கு ஏற்றி தொடங்கப்பட்டது அதனைத் தொடர்ந்து கல்லூரி முதல்வர் முனைவர் து.லில்லி தலைமை தாங்கி அனைவரையும் வரவேற்றார். அவரைத் தொடர்ந்து நெல்லை மாவட்ட பஞ்சாயத்து தலைவர் ராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் விஎஸ்ஆர்.ஜெகதீஸ் மடிக்கணினியை படிப்பதற்கு பயன்படுத்துமாறு மாணவர்களுக்கு அறிவுரை கூறினார்.

மேலும் தமிழக சட்டப்பேரவைத் தலைவர் மு அப்பாவு திசையன்விளை கல்லூரியின் தொடக்கம் முதல் தற்போது வரை உள்ள வரலாறு மற்றும் அனைத்து மாணவர்களும் தமிழில் சரளமாக பேசுவது போல் ஆங்கிலத்திலும் சரளமாக பேச வேண்டும் என மாணவர்களுக்கு சிறப்புரையாற்றி, இளங்கலை மூன்றாம் ஆண்டு மாணவ மாணவியர் அனைவருக்கும் விலையில்லா மடிக்கணினியை வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர் முனைவர் து.லில்லி, கல்லூரி பேராசிரியர்கள் அலுவலர்கள் மற்றும் மாணவ மாணவிகள் சிறப்பாக செய்திருந்தனர்.



■ மதுரையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் தலைமையில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில், தியாகராசர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெறும் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களின் பிறந்தநாள் விழாவினை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். முன்னதாக கவிக்கோ அப்துல் ரகுமான் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் தளபதி, மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன், கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களின் சகோதரர் அப்துல் ரஷீத், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ஔவை அருள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அறிவிப்பு

சென்னை ,பிப்.12.-

2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலையொட்டி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அக்கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை: தோழர்கள் டி.எம்.மூர்த்தி ஒருங்கிணைப்பாளர், க.சந்தானம், வஹிதா நிஜாம், மருத்துவர் ஜி.ஆர்.ரவீந்திர நாத், எம்.செல்வராஜ், த.லெனின், சு.மோகன் குமார், பி.எஸ். மாசிலாமணி, அ.பாஸ்கர் ஆகியோர் கொண்ட தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்கு ஏதுவாக அனைத்து துறை அமைப்புகளும், சமூக ஆர்வலர்கள், அறிவு ஜீவிகள் உள்ளிட்ட பொது மக்களும் தங்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கீழ் கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் விவரங்களுக்கு: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு மாநிலக்குழு "பாலன் இல்லம்" எண் 43/19, செவாலியர் சிவாஜி கணேசன் சாலை, தியாகராயா நகர், சென்னை 600 017, அலைபேசி எண்: 98408 54707, மின்னஞ்சல்: cpi.tamilnadu@gmail.com.

# இந்தியா உற்பத்தி செய்வதை உலக நாடுகள் விரும்பவில்லை: வேதாந்தா தலைவர் அனில் தகவல்

புதுடெல்லி, பிப்.12.-

வேதாந்தா குழும தலைவர் அனில் அகர்வால் கூறியதாவது: "இந்தியா உற்பத்தி செய்வதை உலக நாடுகள் விரும்பவில்லை. ஆனால், உள்நாட்டு உற்பத்தி மட்டுமே வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்பது உலகின் பிற பகுதிகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது.



இந்தியா உற்பத்தி துறையில் முன்னேறுவதை எதிர்க்கும் சக்திகளை தடுத்துப் போராட வேண்டும். ஒரு காலத்தில் உணவுக்காக இறக்குமதியை நம்பியிருந்த நாடு, இன்று அதில் தன்னிறைவு பெற்றுள்ளது. அரசு உருவாக்கிய ஒரு மக்கள் இயக்கத்தால் மட்டுமே இது சாத்தியமானது.

இதுபோல இப்போது இந்தியா தனது கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு தேவையில் 90 சதவீதத்தை இறக்குமதி செய்வதால் பலவீனமான நிலையில் உள்ளது. எனவே, உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதைத் தவிர வேறு வழியில்லை. இந்தியாவுக்குத் தேவையான வளங்களும், திறமையான தொழில் முனைவோர்களும் உள்ளனர். நமக்குத் தேவையானது விரிவான ஆய்வுகள் மட்டுமே. இவ்வாறு அவர் தெரிவித்தார்

# தஞ்சாவூர் மாநகராட்சியில் காலை உணவை திருப்பி அனுப்பிய தூய்மைப் பணியாளர்கள்




தஞ்சாவூர், பிப்.12.-

தஞ்சை மாநகராட்சியில் பணியாற்றும் ஒப்பந்த தூய்மைப் பணியாளர்கள் 16 பேர் நேற்று காலை தங்களுக்கு வழங்கப்பட்ட உணவு தரமாக இல்லை என்று கூறி, ஒப்பந்ததாரரிடமே திருப்பி வழங்கி விட்டனர்.

தஞ்சாவூர் மாநகராட்சியில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள், ஓட்டுநர்கள் என மொத்தம் 757 பேருக்கு காலை உணவு வழங்கும் திட்டம் நேற்று முன்தினம் தொடங்கப்பட்டது.

தொடர்ந்து, 2வது நாளான நேற்று காலை 14 வது கோட்டத்தில் உணவு வழங்கப்பட்டபோது, உணவு தரமாக இல்லை என்றும், ஒவ்வாமை ஏற்படுவதாகவும் கூறி அந்த உணவை தூய்மைப் பணியாளர்கள் உண்ண மறுத்து, அவற்றை ஒப்பந்ததாரரிடமே வழங்கி விட்டனர். மேலும், இதற்கான காரணத்தை விளக்கி, மாநகராட்சியில் கடிதத்தையும் வழங்கினர்.

இதுகுறித்து தமிழ்நாடு உள்ளாட்சித் துறை பணியாளர் சங்க மாவட்ட துணைத் தலைவர் ஆனந்தராஜ் கூறியதாவது: தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாநகராட்சியின் 5, 7, 8 ஆகிய கோட்டங்களில் ஒரு மாதம் பரீட்சார்த்த முறையில் தினமும் ரவா உப்புமா, ரவா கிச்சடி, சேமியா கிச்சடி, வெண் பொங்கல், இட்லி ஆகியவற்றில் ஏதாவது ஒன்று வழங்கப்பட்டது.

ஆனால், அந்த உணவு தரமாக இல்லாததால் பல நாட்கள் நாங்கள் சாப்பிடவில்லை. மேலும் இதுகுறித்து மாநகராட்சி அலுவலர்களிடம் தெரிவித்து, தரமாக உணவு வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டோம்.

இத்திட்டம் தொடங்கப்பட்ட பின் தரமான உணவு வழங்கப்படும் என்று அலுவலர்கள் உறுதி அளித்தனர். ஆனால், தமிழகம் முழுவதும் நேற்று (பிப். 9 இந்த திட்டம் தொடங்கப்பட்ட பிறகு, இன்று காலையும் தரமில்லாத ரவா கிச்சடியையே வழங்கினார்.

தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட உணவுப் பைகள்

தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட உணவுப் பைகள்.

எனவே, 14வது கோட்டத்தில் பணியாற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் 16 பேரும், உணவை அவர்களிடமே திருப்பி வழங்கிவிட்டோம். தரமான உணவு தந்தால்தான் ஏற்றுக் கொள்வோம்.

இல்லையெனில், எங்களுக்கு இந்த உணவு வேண்டாம். இவ்வாறு அவர் கூறினார். இதுகுறித்து மாநகர நகர் நல அலுவலர் நமச்சிவாயத்திடம் கேட்டபோது, "14 வது கோட்டத்தில் தூய்மைப் பணியாளர்கள் காலை உணவைத் திருப்பி அனுப்பிய தகவல் இது வரை எனக்கு வரவில்லை, விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

# நகை திருடியதாக புகார் அளித்த பெண் மார்ச் 4ம் தேதி ஆஜராக மதுரை மாவட்ட தலைமை குற்றவியல் நீதிமன்றம் நோட்டீஸ்




மதுரை, பிப்.12.-
மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் மீது நகை திருட்டு புகார் அளித்த பெண் மார்ச் 4ம் தேதி ஆஜராகுமாறு மதுரை மாவட்ட நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

மடப்புரம் காளியம்மன் கோயில் காவலாளி அஜித்குமார், நகை திருட்டு வழக்கு விசாரணைக்காக தனிப்படைக் காவலர்களால் அழைத்துச் செல்லப்பட்டார். அப்போது காவலர்கள் தாக்கியதில் அஜித்குமார் உயிரிழந்தார்.

இந்த வழக்கில் தனிப்படை காவலர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கில் தனிப்படைக் காவலர்கள் ஜாமீன் கோரி தாக்கல் செய்த மனு, கடந்த வாரம் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, அஜித்குமார் மீது நிகிதா என்பவர் அளித்த நகை திருட்டு புகாரில் உண்மை இல்லை என்று விசாரணையில் தெரிய வந்துள்ளதாகவும், இது தொடர்பாக விரைவில் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்படும் எனவும் சிபிஐ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதி, "செய்யாத குற்றத்துக்காக ஒருவரை போலீஸார் அடித்தே கொலை செய்துள்ளனர். போலீஸாருக்கு தக்க பாடம் கற்பிக்க வேண்டும். விசாரணை முடியும் வரை காவலர் சிறையிலேயே இருக்கட்டும்" என்று கூறி, "பொய் புகார் அளித்த பெண் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?" என சிபிஐயிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்நிலையில், அஜித்குமார் காவல் மரண வழக்கை விசாரித்துவரும் மதுரை மாவட்ட நீதிமன்றத்தில், நகை திருட்டு புகார் அளித்த நிகிதாவை அழைத்து விசாரிக்க அனுமதி கோரி, சிபிஐ தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை மதுரை மாவட்ட தலைமை குற்றவியல் நீதிமன்ற நீதிபதி செல்வபாண்டி விசாரித்து, மார்ச் 4ம் தேதி நிகிதா நீதிமன்றத்தில் ஆஜராக நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார்.

# கனடாவில் பள்ளியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் பலி



ஒட்டாவா, பிப்.12.-
கனடாவில் பள்ளி ஒன்றில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் துப்பாக்கிச் சூடு நடத்தியவர் உட்பட மொத்தம் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் உள்ள தம்ப்ளர் ரிட்ஜ் என்ற நகரில் உள்ள நடுநிலைப் பள்ளியில் ஒரு நபர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 7 பேர் கொல்லப்பட்டனர். தாக்குதல் நடத்திய நபரும் உயிரிழந்த நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேலும், இந்த சம்பவத்தோடு தொடர்புடைய ஒரு வீட்டில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். 25க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். அவர்களில், இருவரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக போலீஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய ராயல் கனடியன் மவுண்ட்டட் காவல் துறை கண்காணிப்பாளர் கென் ஃபிலாய்ட், "துப்பாக்கிச் சூடு நடத்தியவரை போலீஸார் அடையாளம் கண்டுள்ளனர். அவரது பெயரை வெளியிடவில்லை. துப்பாக்கிச் சூட்டுக்கு என்ன காரணம் என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

விசாரணையின் ஒரு பகுதியாக, சம்பந்தப்பட்ட பள்ளிக்குச் சென்ற போலீஸார், பாதிக்கப்பட்டவர்கள் பலரை அடையாளம் கண்டுள்ளனர். துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் உட்பட 6 பேர் பள்ளியில் உயிரிழந்த நிலையில் கிடந்தனர். கடுமையான காயங்களுடன் இருவர் விமானம் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதில், ஒருவர் உயிரிழந்தார். துப்பாக்கிச் சூட்டை நடத்தியவரும் உயிரிழந்தார். கூடுதல் தகவல்களை வெளியிடுவது விசாரணையை பாதிக்கும் என்பதால், அவற்றை வெளியிட நாங்கள் விரும்பவில்லை" என தெரிவித்துள்ளார்.

இந்த துயர சம்பவத்துக்கு கனடா பிரதமர் மார்க் கார்னி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "இந்த கொடூரமான துப்பாக்கிச் சூடு சம்பவத்தால் நான் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளேன். இதில் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த குடும்பங்கள் மற்றும் நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் அதிகாரிகள் பாதிக்கப்பட்டவர்களுடன் நெருங்கிய தொடர்பில் உள்ளனர். இதன்மூலம், முழுமையான ஆதரவு கிடைப்பதை எங்களால் உறுதிப்படுத்த முடியும். இந்த கொடூர துயரத்தை எதிர்கொள்ளும் அனைத்து பிரிட்டிஷ் கொலம்பியர்களுக்கும் கனடா அரசு துணை நிற்கிறது" என தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்துக்கு பிரதமர் மோடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "கனடாவில் நடந்த இந்த கொடூர துப்பாக்கிச் சூட்டால் ஆழ்ந்த அதிர்ச்சி அடைந்தேன். தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த குடும்பங்களுக்கு எனது மனமார்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வாழ்த்துகிறேன். இந்த துயரமான தருணத்தில் கனடா மக்களுடன் இந்தியா ஒற்றுமையாக துணை நிற்கிறது" என தெரிவித்துள்ளார்.

# லிபியாவில் இருந்து ஐரோப்பாவுக்கு சட்டவிரோதமாகச் சென்ற படகு கவிழ்ந்து விபத்து; 53 பேர் பரிதாபமாக உயிரிழப்பு!

வட ஆப்பிரிக்கா, பிப்.12.-
லிபியாவில் இருந்து ஐரோப்பாவுக்கு சட்டவிரோதமாகச் சென்ற படகு கவிழ்ந்த விபத்தில் 4 பச்சிளம் குழந்தைகள் உட்பட 53 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். லிபியாவில் இருந்து படகு புறப்பட்ட சில மணி நேரங்களிலேயே என்ஜின் கோளாறு காரணமாக ராட்சத அலையில் சிக்கி கவிழ்ந்துள்ளது. ஆப்பிரிக்க நாடுகளான நைஜீரியா, காம்பியா மற்றும் செனகல் ஆகியவற்றைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட அகதிகள், ஒரு சிறிய ரப்பர் படகில் லிபியா கடற்கரையிலிருந்து ஐரோப்பிய நாடான இத்தாலியை நோக்கிப் புறப்பட்டனர்.

நடுக்கடலில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, திடீரெனப் படகின் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டுள்ளது. இதனால் படகு மேற்கொண்டு நகர முடியாமல் கடலின் நடுவே தத்தளித்துக் கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் எதிர்பாராத விதமாக எழுந்த ராட்சத அலைகள் படகின் மீது பயங்கரமாக மோதின. இதில் நிலைதடுமாறிய அந்தச் சிறிய படகு கடலில் தலைகீழாகக் கவிழ்ந்தது. இந்த கோர விபத்தில் படகில் இருந்த 53 பேர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

தகவல் அறிந்து விரைந்த மீட்புக் குழுவினர், கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 40 பேரை உயிருடன் மீட்டனர். ஆப்பிரிக்கக் கண்டத்தில் உள்ள பல நாடுகளில் நிலவி வரும் கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் நீடித்து வரும் உள்நாட்டுப் போர்களே இத்தகைய ஆபத்தான பயணங்களுக்கு முக்கியக் காரணமாகின்றன. வாழ்வாதாரத்தைத் தேடியும், உயிர் பிழைக்கவுமே அந்த நாட்டு மக்கள் சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடையத் துணிகின்றனர்.

முறையான பாதுகாப்பு வசதிகள் இல்லாத சிறிய படகுகளில் அதிகப்படியான நபர்களை ஏற்றிச் செல்வதால், இது போன்ற விபத்துகள் லிபியக் கடற்பரப்பில் தொடர்கதையாகி வருகின்றன. தற்போது மீட்கப்பட்டவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு வரும் நிலையில், உயிரிழந்தவர்களின் உடல்களைக் கைப்பற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

# புளியங்குடி இந்து நாடார் பள்ளியில் தமிழக அரசின் விலையில்லா சைக்கிள் : எம்எல்ஏ, நகர துணை சேர்மன் வழங்கினார்



புளியங்குடி, பிப் 12.-
; புளியங்குடி டி என். புதுக்குடி இந்து நாடார் கமிட்டி மேல்நிலைப்பள்ளியில், பதினொன்றாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா நடைபெற்றது. நடைபெற்ற விழாவில் பள்ளி கமிட்டி ஒருங்கிணைப்பாளர் ராமகிருஷ்ணன், தலைமை வகித்தார். மாரியப்பன் ஊர் நாட்டாமைகள் திருமலையாண்டி,(ஆசிரியர்), மாரியப்பன், கருப்பையா ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளியின் தலைமை ஆசிரியர் ராதாகிருஷ்ணன், அனைவரையும் வரவேற்று விழாவை தொடங்கி வைத்தார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். சதன் திருமலைக்குமார், புளியங்குடி நகர்மன்ற துணைத் தலைவர் அந்தோணிசாமி, தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டியினை 446, மாணவ மாணவிகளுக்கு வழங்கினார்கள். பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர் சரவணக்குமார் அனைவருக்கும் நன்றி வழங்கினார். விழாவில் கவுன்சிலர்கள் அருணா தேவி, எஸ்ரா,பள்ளி கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# "கழிப்பறை காகிதத்தைப் போல பாகிஸ்தானை அமெரிக்கா பயன்படுத்தியது" கவாஜா ஆசிப்



இஸ்லாமாபாத், பிப்.12.-
கழிப்பறை காகிதத்தைப் போல பாகிஸ்தானை அமெரிக்கா பயன்படுத்தியது என்றும், பாகிஸ்தான் தனது தவறுகளை ஏற்கவில்லை என்றும் அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் தேசிய அவையில் உரையாற்றிய அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப், "கடந்த காலத்தில் பாகிஸ்தான் அமெரிக்காவுடன் இணைந்து செயல்பட்டது. ஆனால், தனது மூலோபாய நலன்களுக்காக அமெரிக்கா, பாகிஸ்தானை சுரண்டியது. அதன் நோக்கங்கள் நிறைவேறிய பிறகு, கழிப்பறை காகிதத்தைப் போல கருதியது.

1999க்குப் பிறகு குறிப்பாக, செப்டம்பர் 11, 2001 தாக்குதல்களுக்குப் பிறகு அமெரிக்காவுடன் பாகிஸ்தான் இணைந்து செயல்படுவதற்கு கொடுத்த விலை பேரழிவை ஏற்படுத்தியது. 2001க்குப் பிந்தைய காலகட்டத்தில், அமெரிக்கா தலைமையிலான ஆப்கானிஸ்தான் போரில் பாகிஸ்தான் இணைந்தது. தாலிபான்களுக்கு எதிரான இந்த போருக்குப் பிறகு அமெரிக்கா வெளியேறியது. ஆனாலும், வன்முறை, தீவிரவாதம், பொருளாதார நெருக்கடி ஆகியவற்றுடன் பாகிஸ்தான் தொடர்ந்து போராடி வருகிறது.

மதக் கடமை காரணமாக வே ஆப்கனிஸ்தானுக்கு எதிரான மோதலில் பாகிஸ்தான் ஈடுபட்டதாக நாம் சித்தரித்தோம். ஜிஹாத்தில் ஈடுபட பாகிஸ்தானியர்கள் அனுப்பி வைக்கப்பட்டார்கள். இது தவறான வழிநடத்தலாகவும், கடும் சேதத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும் அமைந்தது.

நாம் நமது வரலாற்றை மறுக்கிறோம். நாம் நமது தவறுகளை ஏற்றுக்கொள்ளவில்லை. பயங்கரவாதம் என்பது கடந்த காலத்தில் சர்வாதிகள் செய்த தவறுகளால் ஏற்பட்ட பின்விளைவு.

இரண்டு முன்னாள் ராணுவ சர்வாதிகாரிகள் (ஜியா உல் ஹக் மற்றும் பர்வேஸ் முஷாரஃப்) ஆப்கானிஸ்தான் போரில் இணைந்தனர். உண்மையில் இது இஸ்லாத்துக்காக அல்ல; மாறாக ஒரு வல்லரசை திருப்திப்படுத்துவதற்காக. இதனால், நாம் சந்தித்த இழப்புகள் ஏராளம். நாம் அதை ஒருபோதும் ஈடு செய்ய முடியாது. மீள முடியாத தவறுகளை நாம் செய்துவிட்டோம். இந்த போர்களை நியாயப்படுத்த சித்தாந்த மாற்றங்களுடன் பாகிஸ்தானின் கல்வி முறையே மறுவடிவமைப்பு செய்யப் பட்டது" என தெரிவித்துள்ளார்.

# இந்தியா பாகிஸ்தான் இடையேயான டி.20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி: விமான டிக்கெட் கட்டணம் கிடுகிடு உயர்வு

டெல்லி, பிப்.12.-
இந்தியா பாகிஸ்தான் இடையேயான டி.20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி பிப்.15ல் கொழும்புவில் நடைபெறவுள்ள நிலையில் இலங்கை செல்வதற்கான விமான டிக்கெட் கட்டணம் கிடுகிடுவென உயர்ந்துள்ளது. வழக்கமாக ரூ.30,000 வரை கட்டணம் வசூலிக்கப்பட்டு வரும் நிலையில் இந்தியாபாக். போட்டியால் ரூ.1.45 லட்சம் வரை உயர்ந்துள்ளது. இந்தியா பாகிஸ்தான் போட்டி காரணமாக விமான டிக்கெட் கட்டணம் கடுமையாக உயர்ந்துள்ளதால் ரசிகர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

பிப்.15ம் தேதி காலை 5.10 மணியளவில் டெல்லியில் இருந்து இலங்கை செல்லும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமான கட்டணம் ரூ.1.45 லட்சமாக உள்ளது.

பிப்.15ம் தேதி அதிகாலை 3.25 மணிக்கு டெல்லியில் இருந்து கொழும்பு செல்லும் ஏர் இந்தியா விமான கட்டணம் ரூ.1.09 லட்சமாக அதிகரித்துள்ளது.

பிப்.15ம் தேதி நண்பகல் 12.20 மணிக்கு டெல்லியில் இருந்து கொழும்பு செல்லும் ஏர் இந்தியா விமான கட்டணம் ரூ.90,000 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பிப்.15ம் தேதி சென்னை இலங்கை செல்லும் விமான டிக்கெட் கட்டணமும் பலமடங்கு உயர்ந்துள்ளது. வழக்கமாக சுமார் ரூ.9,000 வரை உள்ள சென்னை இலங்கை விமான டிக்கெட் கட்டணம் ரூ.43,000 வரை அதிகரித்துள்ளது.Rail Freight

பிப்.15ம் தேதி மாலை 3.55 மணிக்கு சென்னையில் இருந்து கொழும்பு செல்லும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமான கட்டணம் ரூ.41,000 ஆக உள்ளது.

பிப்.15ம் தேதி காலை 7.15 மற்றும் 6.15 மணிக்கு சென்னையில் இருந்து கொழும்பு செல்லும் ஏர் இந்தியா விமான கட்டணம் ரூ.31,000 ஆக உள்ளது.



# சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை ஒரே நாளில் ரூ.1,680 உயர்ந்து ஒரு சவரன் ரூ.1,18,320க்கு விற்பனை

சென்னை, பிப்.12.-
சென்னையில் ஆபரணத் தங்கம் விலை சவரனுக்கு மேலும் ரூ.1,520 உயர்ந்துள்ளது. தங்கம் விலை சவரனுக்கு காலையில் ரூ.160 உயர்ந்திருந்த நிலையில் பிற்பகலில் ரூ.1520 உயர்ந்துள்ளது. தங்கம் விலை ஒரே நாளில் ரூ.1,680 உயர்ந்து ஒரு சவரன் ரூ.1,18,320க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு காலை ரூ.20 உயர்ந்திருந்த நிலையில் மாலை ரூ.190 உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,790க்கு விற்பனையாகிறது. பிற்பகலில் வெள்ளி விலை மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.300க்கு விற்பனை செய்யப்படுகிறது.



■ நெல்லை மாவட்டம் வள்ளியூரில் நடந்த தவெக கொடியேற்று விழாவில், திருநெல்வேலி தெற்கு மாவட்ட செயலாளர் ராஜகோபால், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் கிறிஸ்டோபர், மாவட்ட இணைச் செயலாளர் காட்வின் பிரசாத், வள்ளியூர் வடக்கு ஒன்றிய செயலாளர் நாகராஜன், வள்ளியூர் நகர செயலாளர் ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஆராய்ச்சியில் நேர்மையும், சமூக மேம்பாடும் அவசியம்!" — காந்திகிராம பல்கலைக்கழக பயிற்சி வகுப்பில் மைசூர் பல்கலை துணைவேந்தர் உரை



திண்டுக்கல், பிப்.12.-
திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக மானியக் குழுவின் திட்டத்தின் கீழ் இயங்கும் மாளவியா மிஷன் ஆசிரியர் பயிற்சித் திட்டத்தின் சார்பாக "ஆராய்ச்சி முறையியல் மற்றும் புள்ளியியல்" குறித்த 9வது குறுகிய கால பயிற்சி வகுப்பில் விவேகானந்தா அரங்கில் தொடங்கப்பட்டது. மாளவியா மிஷன் ஆசிரியர் பயிற்சித் திட்ட இயக்குநர் மற்றும் பேராசிரியர் ஸ்ரீதேவி வரவேற்புரையுடன் குறுகிய கால பயிற்சி வகுப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். இயற்பியல் துறை முதுநிலை பேராசிரியர் ஜீ. முரளிதரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர். ந. பஞ்சநதம் அவர்கள் தனது சிறப்புரையில் முன் ஆய்வுகளை படிப்பது மட்டுமின்றி அதனை நவீன கால ஆய்வோடு ஒப்பிட்டு பார்க்க வேண்டும். பல்வேறு ஆய்வு கட்டுரைகளை படிப்பதன் மூலம் ஆராச்சி பற்றிய அறிவினை நாம் பெற முடியும். ஆராய்ச்சிக்கான நவீன மென்பொருள்களையும் நுட்பவியலையும் பயன்படுத்தி ஆய்வுகளை சிறப்புற செய்யுமாறு கேட்டுக் கொண்டார். மைசூர் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர். என். கே. லோகநாதந் அவர்கள் தொடக்க உரையில் ஆய்வாளர்கள் ஆய்வு நெறிமுறைகளை முழுமையாக கற்க வேண்டும். ஆய்வு செய்வதன்| மூலம் ஆராய்ச்சி அறிவு மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளுவதற்கான திறன்களை பெற முடியும்.

ஆராய்ச்சியில் வெளியீட்டு நெறிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் கருத்து திருட்டுக்கு இடம் கொடுக்க கூடாது. சுய கற்றலே ஆராய்ச்சியை வலுப்படுத்தும். ஆராய்ச்சியில் தேடல் என்பது மிக மிக அவசியம். ஒவ்வொரு ஆய்வும் சமுதாயத்தை மேம்படுத்த உதவிடும் வகையில் இருக்க வேண்டும். ஆய்வில் நேர்மையும் கடின உழைப்பும் இருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். பல்கலையில் நடைபெற்ற குறுகிய கால பயிற்சி வகுப்பில் இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களிலிருந்து 42 ஆராய்ச்சி மாணவர்கள் பங்கேற்றனர். காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழக இயற்பியல் துறை இணைப்பேராசிரியர் நித்தியானந்தி நன்றியுரை வழங்கினார்.



■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு, தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் நல சங்கம் சார்பில், 18 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம், மாவட்டத் தலைவர் மகுடபதி தலைமையில் நடைபெற்றது. அனைத்து அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

## திசையன்விளை ஜெயந்திநாதர் மரைன் கல்லூரியில் ராகிங் எதிர்ப்பு விழிப்புணர்வு கூட்டம்

திசையன்விளை. பிப்.12.-

திசையன்விளை அருகே உள்ள அரசூர் பூச்சிக்காடு ஜெயந்திநாதர் மரைன் கல்லூரி மாணவர்களுக்கு ராகிங் எதிர்ப்பு விழிப்புணர்வு கூட்டம், கல்லூரியின் சேர்மன் வி.எஸ்.கணேசன் மற்றும் செயலாளர் எஸ்.ஜி.ராஜேஷ் அறிவுறுத்தலின் பேரில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரி துணை முதல்வர் கேப்டன் ராஜசேகர் தலைமை தாங்கினார்.




சிறப்பு விருந்தினராக திசையன்விளை காவல் ஆய்வாளர் எழில் சுரேஷ், மாணவர்களுக்கு ராகிங் எதிர்ப்பு விழிப்புணர்வு குறித்து உரையாற்றினார். நிகழ்ச்சியில் கல்லூரி கேப்டன் எடிசன், ஜிபி ரேட்டிங் கோர்ஸ் இன்சார்ஜ் கேப்டன் அகஸ்டின் மற்றும் தலைமை பொறியாளர் ஜேம்ஸ் ஆகியோர் உதவி இருந்தனர். கல்லூரியின் நிர்வாக பிரதிநிதி அண்ட்டோ எபிபெனி, பேட்டி மக்கள் தொடர்பு அதிகாரி பிரின்ஸ் பிரேம்குமார், வளாக மேலாளர் வெள்ளைச்சாமி மற்றும் விடுதி காப்பாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்திருந்தனர்.




■ திருப்பூர் மாவட்ட சிறப்பு வரைவு வாக்காளர் பட்டியல் பார்வையாளர் / தமிழ்நாடு மின் உற்பத்தி கழக மேலாண்மை இயக்குனர் எம். கோவிந்தராவ் தலைமையில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் மனிஷ் நாரணவரே முன்னிலையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், அனைத்து வாக்காளர் பதிவு அலுவலர்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களுடன் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகள் தொடர்பான பணிகள் மற்றும் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது தொடர்பாக, முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலர் கார்த்திகேயன் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி . அமித் ஆகியோர் உள்ளனர்.

## வட்டார அலுவலக ஒருங்கிணைப்பாளர்கள் பணியிடங்கள் வெளியாதார முறையில் நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சியர் தகவல்

தென்காசி, பிப்.12.-

மக்கள் அமைப்புகளின் திறன் மேம்பாடு தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்திடும் வகையில் வட்டார இயக்க மேலாண்மை அலகில் காலியாக உள்ள வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.



விண்ணப்பதாரர்கள் இளங்கலை பட்டம் ஏதாவது ஒரு பிரிவில் பெற்றிருக்க வேண்டும். மூன்று மாத கணினி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் ( MS Office or computer science or computer applications) அல்லது கணினியில் பட்டபடிப்பு பெற்றிருக்க வேண்டும். 30 வயதுக்குட்பட்டவராக இருந்தல் வேண்டும். ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு / சுய உதவிக்குழுவில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் அனுபவம் பெற்றவராக இருத்திருக்க வேண்டும். தென்காசி மாவட்டத்திற்கு உட்பட்ட அதே குடியிருப்பு பகுதியில் வசிப்பவராக இருக்க வேண்டும். இரு சக்கர வாகனம் ஓட்ட தெரிந்தவராக இருக்க வேண்டும் (ஓட்டுநர் உரிமம்) , நற்சான்றிதழ் பெற்றவராக இருத்தல் வேண்டும். வாழ்ந்து காட்டுவோம் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மாநில அளவிலான திட்டங்களில் பணிபுரிந்து பணிநீக்கம் மற்றும் நிதி தொடர்புடைய குற்றங்களால் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்க கூடாது.

தேர்வு குழு மூலம் தேர்வு செய்யப்படும் நபர்கள் 11 மாத ஒப்பந்த அடிப்படையில் சம்பந்தப்பட்ட வட்டார அளவிலான கூட்டமைப்பு மூலம் நியமனம் செய்யப்படுவர்.

விண்ணப்பங்கள் 06.02.2026 முதல் 16.02.2026 அன்று மாலை 5 வரை சம்பந்தப்பட்ட வட்டார அளவிலான கூட்டமைப்பிற்கு ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு திட்ட இயக்குநர் / இணை இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,மாவட்ட ஆட்சியர் வளாகம் தென்காசி மாவட்டம் 627811 என்ற முகவரியை அணுகலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர்,இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.



## அஇஅதிமுக தலைமைக் கழக புதிய நிர்வாகிகள் அறிவிப்பு

திருப்பூர், பிப்.12-

கழக பொதுச் செயலாளரும், தமிழக முன்னாள் முதலமைச்சரும், சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவரும், புரட்சித் தமிழருமான எடப்பாடி கே.பழனிசாமி ஆணைக்கிணங்க, முன்னாள் அமைச்சரும், திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், உறுப்பினருமான உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்களின் வழிகாட்டுதலின்படி பொறுப்பு அறிவித்ததையொட்டி, உடுமலைப்பேட்டை சட்டமன்ற அலுவலகத்தில் பல்லடம் நகர கழக செயலாளர் பானு எம்.பழனிசாமி, திருப்பூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.சுப்பிரமணியன், பல்லடம் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஏ.சித்துராஜ், வீரபாண்டி மேற்கு பகுதி கழக செயலாளர் எஸ்.சோமசுந்தரம், வீரபாண்டி கிழக்கு பகுதி கழக செயலாளர் என்.ராம்பிரபு, ஆண்டிபாளையம் பகுதி கழக செயலாளர் என்.கவிக்குமார், உடுமலை நகர கழக அவைத் தலைவர் சாமி (எ) எஸ்.சிவராஜ், எம்.ஜி.ஆர் இளைஞர் அணி மாவட்ட செயலாளர் எம்.முத்துக்குமார், ஆகியோர் திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்ட செயலாளர் அவர்களுக்கு சால்வை அணிவித்தும், மலர்கொத்து வழங்கியும் வாழ்த்து பெற்றனர்.




■ ஈரோடு மாவட்ட ஆயுத படை வளாகத்தில் உள்ள குடியிருப்பு பகுதியில் வசிக்கும் காவலர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு, கல்வியை மேம்படுத்தவும், அரசு வேலை வாய்ப்பை ஏற்படுத்தவும், பெற்றோர்களின் நேரங்களை பயனுள்ளதாக மாற்றவும், மாவட்ட கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில், பொது நூலகம், கேரம் போர்டு மற்றும் குழந்தைகள் விளையாடுவதற்கான விளையாட்டுச் சாதனங்கள் அடங்கிய தனி அறையும், மாவட்ட கண்காணிப்பாளர் ஐபிஎஸ் திறந்து வைத்தார். மேலும் நிகழ்ச்சியில் ஆயுதப்படை வளாக முதல் கண்காணிப்பாளர் மற்றும் துணை கண்காணிப்பாளர், ஆய்வாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.




## மதுரை சமயநல்லூரில் அதிமுக சார்பில் திண்ணைப் பிரச்சாரம்

சமயநல்லூர்.பிப்.12.-

மதுரை மாவட்டம் சமயநல்லூரில் அதிமுக சார்பில் திண்ணை பிரச்சாரக் கூட்டம் ஒன்றிய செயலாளர் அரியூர் ராதாகிருஷ்ணன், தலைமையில் நடைபெற்றது. இதில் சட்டமன்ற எதிர்க்கட்சி துணை தலைவரும் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் கலந்துகொண்டு பேசியது : அதிமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட நலத்திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்துக் கூறினார். தொடர்ந்து பொதுமக்களிடம் அதிமுக ஆட்சி அமைந்த உடன் பால்விலை, மின்சார கட்டணம் உயர்வு, வீட்டு வரி உயர்வு, பஸ் கட்டணம் குறைக்க வழிவகை செய்யப்படும். மகளிர் உரிமைத் தொகை 2000 வழங்கப்படும்.

வரும் சட்டமன்ற தேர்தலில் அதிமுக மகத்தான வெற்றியை பெற்று ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்படும் என முன்னாள் அமைச்சர் உதயகுமார் தெரிவித்தார். இதில் மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் வாடிப்பட்டி ராஜேஷ் கண்ணா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாணிக்கம், ஒன்றிய செயலாளர்கள் கல்லணை ரவிச்சந்திரன், வாடிப்பட்டி காளிதாஸ், கொரியர் கணேசன், நகர செயலாளர் அசோக்குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மலையாளம்,மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் மனோகரன்,முன்னாள் கூட்டுறவு துணைத் தலைவர் ராகுல், முன்னாள் அரசு வழக்கறிஞர் ராஜ் குமார், மகளிரணி சாந்தி, கோட்டைமேடு பாலன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்..



■ மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, ஈரோடு மாவட்டம் மேட்டுக்கடை தங்கம் மஹாலில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ், கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா 2026 நிகழ்ச்சியினை துவக்கி வைத்து சீர்வரிசை பொருட்களை வழங்கினார். நிகழ்வின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி ஈரோடு கிழக்கு எம்எல்ஏ வி.சி.சந்திரகுமார் மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, திட்ட அலுவலர் ஐ. பூங்கோதை, மாமன்ற உறுப்பினர்கள், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் சாந்தி உட்பட பலர் உடனிருந்தனர்..



## பறவை காய்ச்சல் எதிரொலியால் கோழி இறைச்சி விலை வீழ்ச்சி

சென்னை, பிப்.12.-

ஆந்திராவில் பறவைக்காய்ச்சல் பரவுவதால், திருவள்ளூர் மற்றும் சென்னைப் புறநகரப்பகுதிகளில் கோழி இறைச்சி விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது. 3 நாட்களுக்கு முன்பு ரூ.280க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ கோழிக்கறி, தற்போது ரூ.220ஆக குறைந்துள்ளது.Rail Freight

சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சில தினங்களுக்கு முன்பு பல காகங்கள் திடீரென உயிரிழந்ததையடுத்து, அவற்றின் மாதிரிகளை பரிசோதித்ததில் அவற்றுக்கு பறவை காய்ச்சல் இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து, தமிழ்நாடு முழுவதும் பறவை காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

மேலும் 'தமிழ்நாட்டில் பறவைக் காய்ச்சல் பாதிப்பு கட்டுக்குள் உள்ளது. மக்களுக்கு பறவை காய்ச்சல் பரவவில்லை. இறைச்சிகளை நன்கு வேகவைத்த பிறகே சாப்பிட வேண்டும். காகம், கோழி போன்ற பறவைகள் உயிரிழந்தால் அவற்றை ஆழமாக குழிதோண்டி புதைக்க வேண்டும்' எனவும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் உள்ள

அஞ்சலி செலுத்திய போது பாஜக எம்எல்ஏவின் செல்போன் ஒலித்ததால் சபாநாயகர் காட்டம்: உத்தரபிரதேச சட்டசபையில் பரபரப்பு'

தமிழ்நாடு உட்பட 17 மாநிலங்களில் தீவிரவாத வழக்குகளுக்கு கூடுதல் நீதிமன்றங்கள்: ஒன்றிய அரசு தலா ரூ. 1 கோடி நிதி ஒதுக்கீடு'

காயம் காரணமாக டி20 உலக கோப்பை தொடரில் இருந்து மிட்செல் மார்ஷ் விலகல்: அவருக்கு பதில் ஸ்டீவ் ஸ்மித் அணியில் சேர்ப்பு!'

வித்தியாசமாக பந்து வீசும் பாகிஸ்தானின் உஸ்மான் தாரிக்கிற்கு தடை விதிக்க வேண்டும்: பீட்டர்சன், சேவாக் கருத்து'

இந்நிலையில் ஆந்திராவில் பறவைக்காய்ச்சல் பரவுவதால், திருவள்ளூர் மற்றும் சென்னைப் புறநகரப்பகுதிகளில் கோழி இறைச்சி விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது. 3 நாட்களுக்கு முன்பு ரூ.280க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ கோழிக்கறி, தற்போது ரூ.220ஆக குறைந்துள்ளது. பறவைக்காய்ச்சல் பரவுவதாக பரவி வரும் செய்தியால் கோழிக்கறி, முட்டையை சாப்பிடுவதில் பொதுமக்கள் தயக்கம் காட்டி வருகின்றனர்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000